இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 331 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 28 – ஞாயிற்றுக்கிழமை 12 ஜூலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 331 : Thiruvalluvar Year - 2057 - Aani 28 - Sunday 12 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00

# அடக்குமுறைக்கு எதிராக வீரத்துடன் போராடிய மாவீரன் அழகுமுத்துக்கோன்!

## பிறந்தநாளையொட்டி – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



சென்னை, ஜூலை 12 -

விடுதலைப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக் கோன் 269-வது பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முக நூலில், “அடக்குமுறைக்கு எதிராக வீரத்து டன் போராடிய மாவீரன் அழகுமுத்துக்கோன்” என்று புகழாரம் சூட்டி யுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்



தமது முகநூலில் பதிவிட்டி ருப்பதாவது:-

**சிப்பாய்ப் புரட்சிக்கு நூறாண்டுகளுக்கு முன்பே விடுதலைக் கனலை நம் மண்ணில் மூட்டிய மாபெரும் வீரர் அழகு முத்துக்கோன்.**

**அடிமையாய் உயிர் வாழ்வதைக் காட்டிலும் அடக்குமுறைக்கு எதிராக வீரத்துடன் போராடி மடிவதே மேல் என விடுதலைப் போராட்டத் துக்கான வீர வித்தாய் மக்கள் மனங்களில் ஊன்றப்பட்ட அழகு முத் துக் கோன் அவர்களின் பிறந்தநாளில் அவருக்கு என் வீர வணக்கம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது முகநூலில் பதிவிட்டுள்ளார் .

## காமராஜர் – எம்.ஜி.ஆர்.

# விஸ்வரூபத்தை பார்த்த எங்களுக்கு விஜய் எம்மாத்திரம்?

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் காட்டமான விமர்சனம்!

**காட்பாடி, ஜூலை 12-**

**“காமராஜர், எம்.ஜி.ஆர்., ஜெய லலிதா ஆகியோரின் விஸ்வரூபத் தைப் பார்த்த எங்களுக்கு விஜய் எம்மாத்திரம்?” என்று கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் காட்டமாக விமர்சித் துள்ளார்.**

வேலூர் மாவட்டம், காட்பாடி யில் நேற்று முன்தினம் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:

எடுத்தேன் கவிழ்த்தேன் என பேசுவது முதல்வர் விஜய்க்கு முறையல்ல. இப்படித்தான் ஒரு காலத்தில், ‘எங்களை விட்டால் ஆளே இல்லை’ என, காங்கிரஸ் சொன்னது.



அந்த கட்சி தோற்காமலா போய் விட்டது? சொந்த பலம் இல்லாமல், ஊரான் பலத்தில் இருக்கிறவருக்கு இவ்வளவு தர்பார் தேவையில்லை.

கரூர் நெரிசல் வழக்கில், அவர்கள் மீது தான் பழி உள்ளது. சம்பவத்துக்கு காரணம் தி.மு.க.,வா, த.வெ.க.,வா என, சி.பி.ஐ., முடிவு செய்யும்.

சட்டசபையிலிருந்து எதிர்க்கட்சி கள் வெளியேறுவது அவர்களின் உரிமை. எந்த சபாநாயகரும் கதவை மூடி, தடுக்க முடியாது. விஜய்க்கு, முதல்வருடைய அதிகா ரமும் தெரியவில்லை, சபாநாயகரு டைய அதிகாரமும் தெரியவில்லை.

நாங்கள், காமராஜரின் விஸ்வ ரூபத்தை பார்த்திருக்கிறோம். எல் லாம் வல்லவனாகிய எம்.ஜி.ஆரு டைய விஸ்வரூபத்தையும் பார்த்திருக்கிறோம். ஜெயலலிதா வின் விஸ்வரூபத்தையும் பார்த்தி ருக்கிறோம். இவர் எம்மாத்திரம் என்பதை பார்ப்போம்.

### வெட்கக்கேடாகி விடும்!

அவர், ‘களவாணி’ என கூறிய தற்கு பதில் கூறும் அளவுக்கு நான் தரம் தாழ்ந்து போக விரும்ப வில்லை. மேகதாது விவகாரத்தில், யார் ஆட்சியில் முறையாக வாதாட வில்லை என்பதை நான் எடுத்து கூறினால், வெட்கக்கேடாகி விடும்.

### அசைவக்கடைக்காரர்!

‘ஐந்து நிமிடம் கொளத்தூரில் பேசியதற்கே, கொத்து பரோட்டா போட்டோம்’ என்றும் முதல்வர் விஜய் பேசியுள்ளார். சாலையோர அசைவ கடை விமர்சகர்களுக் கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

இவ்வாறு துரைமுருகன் அவர் கள் பேட்டியளித்தார்.

# விமான நிலையம் அமைக்க பரந்தூர் பொருத்தமான இடம்!

## போலிச் செய்தியை பரப்பும் அமைச்சருக்கு தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

சென்னை, ஜூலை 12 -

விமான நிலையம் அமைக்க பரந்தூர் பொருத்தமான இடம் என்று விமான நிலையங் கள் ஆணையம் ஏற்றுக் கொண்டது வெளிப்ப டையான உண்மை என்றும் இவ்விஷயத்தில் த.வெ.க. அமைச்சர் மாண வர்களிடம் பொய்ச்செய் தியை பரப்புவதை நிறுத் திக்கொள்ள வேண்டும் என்றும் தி.மு.க. ஐ.டி. விங் அறிவுறுத்தியுள்ளது.

தி.மு.க. ஐ.டி. விங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், போலிச் செய்திகளை பரப்பும் அமைச்சரே, உங்கள் பொய் உரையை நிறுத்துங்கள் என அறிவு றுத்தப்பட்டுள்ளது.

ஒரு அமைச்சரே மாண வர்களிடம் தவறான தகவலை பரப்புவது மிக வும் கவலை அளிக்கிறது என்றும் தி.மு.க. ஐ.டி. விங் கூறியுள்ளது.

நீங்கள் பா.ஜ.க.வில் இருந்தபோதே போலிச் செய்திகளை உருவாக்கி பரப்பும் பின்னணியை கொண்டவர் என்பது அனைவருக்கும் தெரி யும், இப்போது பா.ஜ.க. வின் கிளைக்கட்சியான த.வெ.க.விற்கு தாவிய பிறகும் அந்த குணம் தொடருகிறது.

ஆனால், அரசு ஆவ ணங்கள் என்பது வெளிப் படையானவை. நீங்கள் கூறுவதற்கு நேர் எதிர்மா றானது, உண்மை என் பதை அவை உறுதிப் படுத்துகின்றன.

இந்திய விமான நிலையங்கள் ஆணையம் பரந்தூரை நிராகரிக்க வில்லை. பரந்தூர் தான் மிகவும் பொருத்தமான இடம் என்பதை தொழில் நுட்ப ரீதியான ஆய்வுக் குப் பின் அவர்கள் பரிந்துரை செய்திருக்கி றார்கள்.

நீர்நிலைகள் குறித்து சுற்றுச்சூழல் மதிப்பீட் டில் குறிப்பிடப்பட் டுள்ள போதிலும் அந்த இடம் ஓடுதளத்திற்கு பொருத்தமற்றது என்று கூறவில்லை.

எனவே உங்கள் அரசி யல் நோக்கத்திற்காக உண்மையை மாற்றப் பார்க்காதீர்கள், மாண வர்களுக்கு உண்மை தான் வேண்டும், உங்க ளால் கட்டமைக்கப் பட்ட உண்மையல்ல என்று தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

## ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சென்னை துறைமுகம் – மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம்!

# வரும் 2029ஆம் ஆண்டு நிறைவடையும்!

## தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் தகவல்!

சென்னை, ஜூலை 12 -

சென்னை துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலை திட்டம் வரும் 2029ம் ஆண்டு மார்ச் மாதம் நிறை வடையும் என்று தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தின் சென்னை மண்டல அதிகாரி தெரிவித் துள்ளார்.

சென்னை துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டத்தை, முத்த மிழறிஞர் கலைஞர், 2009ம் ஆண்டு தொடங்கி வைத்து, பணிகள் நடந்து வந்தன. பின்னர் ஆட்சி மாற்றம் கார ணமாக அ.தி.மு.க. அரசு, பணி களை கிடப்பில் போட்டது. மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, திட்டம் மாற்றியமைக்கப்பட்ட மீண்டும் ஒன்றிய அரசிடம் ஒப்புதல் பெற்று அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2022ம் ஆண்டு அடிக்கல் நாட்டினார். பின் னர் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

சென்னை துறைமுகம் - மதுரவாயல் இடையே, 5 ஆயிரத்து 600 கோடி ரூபாயில் பறக்கும் சாலை அமைக்கும் திட்டப் பணிகள் நடை பெற்று வருகின்றன. அதில், தற்போது 22 சதவீதப் பணி கள் நிறைவு பெற்றுள்ளன. கூவம் ஆற்றின் மேல்புற மும் 15 புள்ளி 5 கிலோ மீட் டர் தொலைவுக்கு இந்த மேம்பாலம் அமைக்கப் பட்டு வருகிறது.

மழைக் காலமான செப் டம்பர் முதல் ஜனவரி மாதம் வரை பணிகள் ஆற்றுப் பகுதிகளில் நடைபெறாது என்று தேசிய நெடுஞ்சா லைத் துறை ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த திட்டம் 2029ம் ஆண்டு மார்ச் மாதத்திற் குள் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கிளம்பாக்கம் முதல் செங்கல்பட்டு அருகே உள்ள மகேந்திரா சிட்டி வரையி லான மேல்நிலை சாலை அமைக்கும் திட்டத்துக்கு 3 ஆயிரத்து 186 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு வருவதாகவும் தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் தெரிவித்துள்ளது.

## கரூர் சம்பவம்: மக்களைத் தவிக்கவிட்டது யார் –

# மக்களுடன் நின்றது யார் என தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

தூத்துக்குடி, ஜூலை 12-

“கரூர் துயரத்தின்போது மக்களை தவிக்கவிட்டது யார்? மக்களுடன் நின்றது யார்? என தமிழ்நாட்டு மக்க ளுக்குத் தெரியும்” என கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், கழக மக்களவை குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி, அளித்த பேட்டி: -

த.வெ.க. ஆட்சியில், அவர்கள் எம்.எல்.ஏ.க்கள், அமைச்சர்கள், ஆய்வு என்ற பெயரில் எந்த இடங்களுக்கு போகக்கூடாதோ அந்த இடங்களுக்கு தொடர்ந்து சென்று,



அங்கிருக்கும் மக்களுக்கு பல சிக்கல் களை உருவாக்கி வருகின்றனர்.

குறிப்பாக, பள்ளிகளுக்குச் சென்று அங்கே இருக்கும் குழந்தை களின் மனநிலையை பாதிக்கும் அளவுக்கும், அவர்களுக்கு மன உளைச்சலை தரும் அளவுக்கும் நடந்து கொள்கிறார்கள்.

இதையெல்லாம் தாண்டி முதல்வர் விஜய்யும் அதை செய்யும்போது, இந்த ஆட்சி எதனை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகிறது.

முதல்வர் தொடங்கி அமைச்சர் வரை அனைவரும் அவர்களுக்கென பொறுப்புகள் இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். கரூர் துயரம் குறித்து அதிகமாக பேச விரும்பவில்லை.

ஏனென்றால், இதுபோன்ற துயர சம்பவம் குறித்து பேசுவதை பொறுப் புணர்வுடன் தவிர்ப்பதே நல்லது. விசாரணையில் இருக்கக்கூடிய விஷயம் குறித்து பேச வேண்டாம் என்ற பொறுப்புணர்வு எனக்கு இருப் பதால் கரூர் துயர சம்பவம் குறித்து பேசாமல் இருப்பதுதான் சரியாக இருக்கும் என்று கருது கிறேன்.

ஆனால், கரூர் துயரத்தின்போது மக்களோடு நின்றவர்கள் யார்? அவர் களுக்கு உதவி செய்தவர்கள் யார்? மக்களை தவிக்க விட்டுவிட்டு அங்கி ருந்து ஓடிப் போனவர்கள் யார்? என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.